

விடுதலைப் போராட்ட வீரர் ஒண்டிவீரன் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டை நீதிமன்றம் எதிரில் உள்ள மண்டபத்தில் அமைந்துள்ள விடுதலைப் போராட்ட வீரர் ஒண்டிவீரன் அவர்களின் திருவுருவ சிலைக்கு தமிழக அரசு சார்பில் சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு, ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மா.மதிவேந்தன், கழக துணை பொதுச் செயலாளர் அந்தியூர் செல்வராஜ் எம்.பி., மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமார், தூய்மைப் பணியாளர்கள் நலவாரியத் தலைவர் டாக்டர். திப்பம்பட்டி வெ.ஆறுச்சாமி, நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ., மேயர் ராமகிருஷ்ணன், துணை மேயர் ராஜ்,கிறிஸ்தவ தேவாலயங்களில் பணியாற்றும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நலவாரியத் தலைவர் விஜிலா சத்யானந்த் ஆகியோர் முன்னிலையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். நிகழ்வில் முன்னாள் எம்.எல்.ஏ.வி.பி.ராஜன், நெல்லை மாநகர பொறுப்பாளர் கிழக்கு தினேஷ் உள்பட உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள், திரளாகக் கலந்து கொண்டனர்.



விடுதலைப் போராட்ட வீரர் ஒண்டிவீரன் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு நெல்லை பாளையங்கோட்டை நீதிமன்றம் எதிரில் உள்ள மண்டபத்தில் அமைந்துள்ள விடுதலைப் போராட்ட வீரர் ஒண்டிவீரன் அவர்களின் திருவுருவச் சிலைக்கு நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் மாநில தொண்டர் அணி துணைச் செயலாளர் ஆவின் ஆறுமுகம்,மாநில விவசாயத் தொழிலாளரணி துணைச் செயலாளர் கணேஷ் குமார் ஆதித்தன் ஆகியோர் உள்ளனர்.

### வாக்காளர் பட்டியலை துல்லியமாக சரிபார்த்து போலி வாக்காளர்களை நீக்கி

# 2026ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் கழகம் வெற்றிபெற அயராது பாடுபடுவோம்!

## தஞ்சை வடக்கு மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்! சாக்கோட்டை க. அன்பழகன் சிறப்புரை!

தஞ்சாவூர் ஆக.21-

தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. செயற் குழுக் கூட்டம் 17.08.2025 காலை 10.00 மணியளவில் கும்பகோணம் மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத்தலைவர் க.நசீர் முகமது தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் முன்னாள் எம்.பி செ.இராமலிங்கம், முன்னிலை வகித்தார்.

மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ கூட்டத்தில் நிறைவேற்றபட வேண்டி தீர்மானங்கள் குறித்து சிறப்புரையாற்றினார்.

இக்கூட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள் கோவி.அய்யாராசு, எஸ்.துரைமுருகன், ஜெயலெட்சுமி, மாநகரக் கழகச் செயலாளர் சு.ப.தமிழழகன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் குட்டி இரா. தெட்சிணாமூர்த்தி உள்ளிட்ட ஒன்றிய, பகுதி, பேரூர் செயலாளர்கள் பங்கேற்றனர்.,

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் :

கழகத் தலைவர் திராவிட நாயகர் கட்டளைப்படி ஓரணியில் தமிழ்நாடு' முழக்கத்தை ஒவ்வொரு குடும்பத்தி லும் ஒலிக்க வைத்து உறுப்பினர் சேர்க்கையில் நமது தஞ்சை வடக்கு மாவட்டம் இலக்கை முடிக்க உறுதுணையாக பணியாற்றிய மாநகர, ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் கழகச் செயலாளர்கள், தொகுதி பார்வையாளர்கள், பி.எல்.ஏ2, பி.டி.ஏ., தகவல் தொழில் நுட்ப அணி, பி.எல்.சி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் அனைவருக்கும் இக்கூட்டத்தின் வாயிலாக மனமார்ந்த நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

**முதல்வருக்கு நன்றி!**

தமிழ்நாட்டிலுள்ள வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத் திறனாளி குடும்ப அட்டைதாரர்களின் இல்லத்துக்கே சென்று அரிசி, சர்க்கரை உள்ளிட்ட ரேஷன் பொருட்களை விநியோகம் செய்யும் 'தாயுமானவர் திட்டத்தை' தொடங்கி வைத்த முதலமைச்சர் அவர்களுக்கு இக்கூட்டம் பாராட்டி மகிழ்கிறது.

இலவசமாக ஏழை, எளிய மக்கள் தாங்கள் வசிக்கும் பகுதிக்கு அருகிலேயே இலவச சிறப்பு மருத்துவ பரிசோதனை மற்றும் நோய்களை ஆரம்ப நிலையி லேயே கண்டறிந்து உடனடியாக உரிய சிகிச்சை அளிப்பதற்காக "நலம் காக்கும் ஸ்டாலின்" என்ற மருத்துவ சேவை திட்டத்தை அறி முகப்படுத்தி முதலமைச்சர் அவர்களுக்கு இக்கூட்டம் பாராட்டி மகிழ்கிறது.

**வாக்காளர் பட்டியலை தீவிரமாக சரிபார்ப்போம்!**

தமிழ்நாட்டில் உள்ள கடைகோடி மக்களுக்கும், அவர்கள் அன்றாடம் அணுகும் அரசுத் துறைகளின் சேவைகள் / திட்டங்களை அவர்களின் இல்லங்களுக்கு அருகிலேயே சென்று வழங்கும் உங்களுடன் ஸ்டாலின் என்ற புதிய திட்டத்தினை அறிவித்த முதலமைச்சர் அவர்களுக்கு இக்கூட்டம் பாராட்டி மகிழ்கிறது.

தலைமைக் கழகத்தால் வழக்கப்பட்டுள்ள BLA2 மற்றும் BLC பட்டியல் தங்கள் வசம் கொடுக்கபட்டபடுள்ளது. அதனை சரிப்பார்த்து ஏதேனும் திருத்தம் இருப்பின் அதனை திருத்தம் செய்து வருகின்ற 25.08.2025 அன்றுக்குள் மாவட்டக் கழகத்தில் ஒப்படைக்கும்படி இக்கூட்டத்தின் வாயிலாக கேட்டுக்கொள்கிறோம்.

பா.ஜ.க.வின் இந்த பாதக வேலையை நாம் முறியடித்து 2026-ஆம் ஆண்டு சட்டமன்ற பொதுத் தேர்தலில் அபார வெற்றிபெற தீவிரமாக வாக்காளர் பட்டியலை துல்லியமாக தவறில்லாமல் சரிப்பார்த்து போலி வாக்காளர்கள், வாக்காளர் பட்டியலில் இடம் பெறாமலும், உயிரோடு இருக்கும் வாக்காளர்கள் பெயர்கள்நீக்கப்பட்டிருந்தாலும், புலம் பெயர்ந்த வாக்காளர்கள் பெயர்கள் இருந்தாலும் உடனடியாக நீக்கம், திருத்தம் செய்யவும் உரிய நடவடிக்கை எடுக்க இக்கூட்டம் மாநகர, ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்களை கேட்டுக்கொள்கி றது.

**வாக்குத் திருட்டை தடுத்திடுவோம்!**

பாசிச பா.ஜ.க. அரசு தனது கைபாவையாக சி.பி.ஐ, அமலாக்கத்துறை மற்றும் வருமானவரித் துறை போன்ற அரசு இயந்திரத்தை எதிர்கட்சிகளை மிரட்டும் எந்திரமாக பயன்படுத்தி வந்தது. தற்போது உச்சபட்ட சமாக இந்தியத் தேர்தல் ஆணையத்தையே பாஜ.க.வின் சார்பு அணி போல் மாற்றி வாக்கு திருட்டைச் செயல்படுத்திவருகிறது. குடிமக்களின் வாக்குரிமையைப் பறிக்கும் தேர்தல் ஆணையத்தின் பீகார் சிறப்புத் தீவிரத் திருத்தத்தை (SIR) எதிர்த்தும், அகில இந்திய அளவில் தேர்தல் ஆணையத்தின் துணை கொண்டு தேர்தல் களத்தில் பா.ஜ.க.வின் "வாக்குத் திருட்டை" வன்மையாக கண்டித்தும் இக்கூட்டம் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

தஞ்சை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநகர, ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர்க் கழகங்களில் கிளை மற்றும் வார்டு கழகங்கள் தோறும் பொது உறுப்பினர்கள் கூட்டத்தை கூட்டி வருகின்ற 2026 சட்டமன்ற பொது தேர்தல் முன்னோற்பாடு பணிகள் குறித்து கலந்தாலோசணை செய்ய உரிய ஏற்பாடு செய்ய மாநகர, ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்களை இக்கூட்டத்தின் வாயிலாக கேட்டுக்கொள்ளப்படுகிறது.

கழக முப்பெருவிழா பொதுக்கூட்டம் மாநகர ஒன்றிய பகுதி பேரூர் கழகத்தின் சார்பில் கழக சொற்பொழிவாளர்களிடம் மாவட்டக் கழக பொறுப்பாளர் மூலம் தேதியை உறுதி செய்து தர கேட்டுகொள்வது எனவும் பெற்று தரும் சொற்பொழிவாளர்களை வைத்து கூட்டத்தை நடத்துவது எனவும் இக்கூட்டத்தின் மூலம் தெரிவித்து கொள்கிறது.

**இரங்கல் தீர்மானம்**

நாகாலாந்து ஆளுநர் இல.கணேஷன் அவர்கள், முன்னாள் பாபநாசம் சட்டமன்ற உறுப்பினர் ஆர். வி. சௌந்தர ராஜன் அவர்களின் இளையமகன், போக்குவரத்துத்துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் அவர்களின் சின்ன மாமனார் ஆர்.வி.எஸ்.ரங்கராஜன், முன்னாள் ஒன்றிய பிரதிநிதி துரை.சாமிநாதன், பசுபதி கோவில் அவைத்தலைவர் கலியபெருமாள், மெலட்டூர் தனபால், ஆடுதுறை உத்திராபதி அவர்களின் சகோதரர் மு.குப்புசாமி மற்றும் நடுவக்கரை கல்யாணசுந்தரம் ஆகியோரின் மறைவிற்கு இக்கூட்டம் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது என தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.





கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்க கழக இளைஞரணிச் செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆலோசனையின் படி மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மேற்கு சட்டமன்றத் தொகுதிக்கு சம்மட்டிபுரம் பகுதி 69வது வார்டுக்குட்பட்ட சொக்கலிங்கநகர் பகுதி குடும்ப அட்டைதாரர்களுக்கு முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த தினத்தை முன்னிட்டு மாவட்டச் செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி நலத்திட்ட உதவிகள் வழங்கினார். உடன் மாநில இளைஞரணி துணைச் செயலாளர் ஜி.பி.ராஜா, மாநில விவசாய அணி துணைச் செயலாளர் கணேசன், வட்டச் செயலாளர் கே.ஏ.செந்தில், பெத்தானியாபுரம் பகுதிச் செயலாளர் மதிவெங்கடேஷ், இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் வெற்றிச்செல்வன், ஐயப்பன், அன்புச்செல்வன் உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர் மற்றும் பொதுமக்கள் பங்கேற்றனர்.

### ஈரோடு மஞ்சள், பவானி ஜமுக்காளத்தை புறக்கணிக்கும் ஒன்றிய அரசு!

# தேசிய மஞ்சள் வாரியத்தில் ஈரோடு விவசாயிகளுக்கு வஞ்சகம்!

## நாடாளுமன்றத்தில் – ஈரோடு கே.இ.பிரகாஷ் குற்றச்சாட்டு!

புதுடெல்லி, ஆக.21-

ஈரோடு மஞ்சள், பவானி ஜமுக்காளத்தை புறக்கணி க்கும் ஒன்றிய அரசு நாடாளுமன்றத்தில் எழுப்பிய கேள்விகளுக்கு மெத்தனப் பதில்கள் வந்துள்ளது எனவும், தேசிய மஞ்சள் வாரியத்தில் ஈரோடு விவசாயி களின் குரலுக்கு இடம் கொடுக்காமல் வஞ்சகம் செய்கிறது ஒன்றிய அரசு எனவும் ஈரோடு தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ. பிரகாஷ் கண்டனம் தெரிவித்துள்ளார்.



அவரது குற்றச்சாட்டு வருமாறு:-

இந்திய கைவினைப் பொருட்கள் மற்றும் விவசாயப் பொருட்களை உலக அரங்கில் முன்னெடுத்துச் செல்வதாக பேசும் ஒன்றிய அரசு, தமிழ்நாட்டின் தனித்துவமான ஈரோடு மஞ்சள் மற்றும் பவானி ஜமுக்காளம் உள்ளிட்ட பொருட்களை மட்டும் அக்கறையில்லாமல் அணுகிக் கொண்டிருக்கிறது. இது என் தொகுதி மக்களின் வாழ்வாதாரத்தின் மீது ஒன்றிய அரசு நடத்தும் ஒரு போரென்றே எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது.

இன்று நாடாளுமன்றத்தில், உலகப் புகழ் பெற்ற ஈரோடு மஞ்சள் மற்றும் பவானி ஜமுக்காளத்தின் ஏற்றுமதி மற்றும் சந்தைப்படுத்துதல் குறித்த விவரங்களை ஒன்றிய வணிகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்திடம் கேட்டேன். ஆனால், கிடைத்த பதில்கள் அதிர்ச்சியளிப்பதாகவும், பெருத்த ஏமாற்றமளிப்பதாகவும் அமைந்துள்ளன.

**தனிப்பட்ட தரவுகள் இல்லாத பொதுவான புள்ளி விவரங்கள்**

நான் கேட்டது ஈரோடு மஞ்சளின் தனிப்பட்ட ஏற்றுமதி விவரங்கள். ஆனால், அமைச்சர் ஒட்டு மொத்த தமிழ்நாட்டின் மஞ்சள் ஏற்றுமதி புள்ளி விவரங்களைக் கொடுத்துள்ளார். ஈரோடு மஞ்சள் புவிசார் குறியீடு (GI) பெற்று, சர்வதேச சந்தையில் தனக்கென ஒரு இடத்தைப்பிடித்துள்ளது. ஆனால், அதன் தனித்துவத்தை மறைத்து மொத்த தமிழ்நாட்டு புள்ளி விவரங்களுடன் கலந்து, ஈரோட்டு விவசாயிகளின் உழைப்பை குறைவு படுத்தும் செயலைச் செய்கிறது ஒன்றிய அரசு.

இதே நிலைதான் பவானி ஜமுக்காளத்திற்கும். அதன் பாரம்பரியமான கைத்தறி நெசவுத் திறனையும், புவிசார் குறியீட்டையும் கண்டுகொள்ளாமல், ஒட்டுமொத்த ஜவுளி ஏற்றுமதி யுடன் சேர்த்துப் பேசுவது, பவானி நெசவாளர்களின் உழைப்பை அவமானப்படுத்தும் செயல்.

**வாரியம் எனும் பெயரில் வஞ்சகம்; தமிழ்நாட்டுக்கு மறுக்கப்படும் பிரதிநிதித்துவம்**

மஞ்சள் ஏற்றுமதியை மேம்படுத்த 'தேசிய மஞ்சள் வாரியம்' அமைக்கப்பட்டிருப்ப தாக அமைச்சர் பெருமையாக பதிலில் சொல்லியிருக்கிறார். வாரியம் வரவேற்கத்தக்கதே. ஆனால், 'மஞ்சள் மாநகரம்' என்று அழைக்கப்படும் ஈரோடு உட்பட, ஒட்டுமொத்த தமிழ்நாட்டிற்கும் இந்த வாரியத்தில் பிரதிநிதித்துவம் மறுக்கப்பட்டிருப்பது ஏன்?

இந்தியாவில் இதுவரை வெறும் 6 வகை மஞ்சள்களுக்கு மட்டுமே புவிசார் குறியீடு வழங்கப்பட்டுள்ளது. இதில் தமிழ்நாட்டின் ஈரோடு மஞ்சள் புவிசார்குறியீடு பெற்றுள்ளது. இந்தியாவின் மொத்த மஞ்சள் ஏற்றுமதியில் கடந்த ஆறு ஆண்டுகளில் தமிழ்நாட்டின் பங்கு 9 - 12 %

இத்தனை முக்கியத்துவம் இருந்தும், தமிழ்நாட்டிற்கு மட்டும் பிரதிநிதித்துவம் மறுக்கப்பட்டு வருகிறது. மஞ்சள் மாநகரத்தின் பிரதிநிதியாக கேட்கிறேன், ஈரோட்டு விவசாயிகளின் குரலுக்கு இந்த வாரியத்தில் இடமில்லை என்றால், இந்த வாரியம் யாருக்காகச் செயல்படுகிறது? இது வெறும் பெயரளவிலான வாரியமா அல்லது வேறு மாநிலங்களின் நலனுக்காக மட்டுமானதா?

**தொடர்ந்து குரல் கொடுப்பேன்**

ஈரோடு மஞ்சள் மற்றும் பவானி ஜமுக்காளத்தின் தனிப்பட்ட முக்கியத்து வத்தை ஒன்றிய அரசு உடனடியாக அங்கீகரிக்க வேண்டும். அவற்றின் ஏற்றுமதி மற்றும் சர்வதேச சந்தைப்படுத்துதலுக்கு சிறப்பு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். மிக முக்கியமாக, தேசிய மஞ்சள் வாரியத்தில் தமிழ்நாட்டிற்கு நியாயமாக கிடைக்க வேண்டிய பிரதிநிதித்துவத்தை வழங்க வேண்டும்.

இவை நடக்கும் வரை என் குரல் தொடர்ந்து ஒலிக்கும்.

இவ்வாறு கே.இ.பிரகாஷ் எம்.பி. தெரிவித்துள்ளார்.

# மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. சிறப்புரை!

மயிலாடுதுறை, ஆக.21 -

மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் மயிலாடுதுறையில் மாவட்டக் கழக அலுவலகத்தில் கலைஞர் அரங்கில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்டக் கழக அவைத்தலைவர் கே.ஜி.சீனிவாசன் தலைமை தாங்கினார். கழக உயர் நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் கூட்டத்தின் நோக்கம் குறித்தும், கூட்டத்தில் நிறைவேற்றப்பட உள்ள தீர்மானங்கள் குறித்து மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் பேசினார். கூட்டத்தில், கழக கொள் கைப் பரப்பு துணைச் செயலாளர் குத்தாலம் க.அன்பழகன், மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஆர். அருள்செல்வம், தகவல் தொழில் நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் பி.எம்.ஸ்ரீதர், மாநில இலக்கிய அணி துணைச் செயலாளர் வை. சௌமியன், சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர்கள் கி.சத்தியசீலன், எம்.எம். சித்திக், ஏ.சி.என்.விஜயபாலன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் முத்து. மகேந்திரன், இராம. இளங்கோவன், ஜி.என். ரவி, மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் மு.ஞானவேலன், எஸ். செல்வமணி, கண்ணகி பன்னீர், மாவட்டக் கழக பொருளாளர் மகா. அலெக்சாண்டர், மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் எஸ்.சுவாமிநாதன், பொதுக்குழு உறுப்பினர்கள் பி.சிவதாஸ், எஸ். சங்கரநாராயணன், எம். பி.கென்னடி, நத்தம் ஏ. வின்சென்ட், ஹர்சத், காந்தி, ஜெ.கபிலன், சுபாநெடுஞ்செழியன், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் மூவலூர் எம். மூர்த்தி, மங்கை எம். சங்கர், செல்லசேது.ரவிக்குமார், மலர்விழிதிருமாவளவன், பி.எம்.அன்பழகன், ஏ.ஜி.ஜெ.பிரபாகர், எம்.அப்துல்மாலிக், ஞான. இமையநாதன், அமிர்த. விஜயகுமார், பஞ்சு. குமார்,கு.வைத்தியநாதன், ஏ.ஆர்.ராஜா, ப.முருகமணி, நகரக் கழகச் செயலாளர்கள் குண்டா மணி (எ) என்.செல்வராஜ், ம. சுப்பராயன், பேரூர் செயலாளர்கள் எம்.சம்சுதீன், அண்ணாதுரை, எம். அன்புச்செழியன், எம். கே.முத்துராஜா, மற்றும் மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன .



நெல்லை கிழக்கு மாவட்டம் கோபாலசமுத்திரம் முதல்நிலை பேரூராட்சியில் நடைபெற்ற 'உங்களுடன் ஸ்டாலின்' முகாமில் நெல்லை கிழக்கு மாவட்ட ச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் பங்கேற்று வருகை தந்த பொதுமக்களின் குறைகளைக் கேட்டறிந்து, கோரிக்கை மனுக்களுக்கு உடனடி தீர்வும் பெற்றுக் கொடுத்து,பொதுமக்களுக்கு பேரூர்க் கழகம் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட குளிர்பானங்கள் மற்றும் தேநீர் வழங்கினார். உடன் கோபால சமுத்திரம் முதல்நிலை பேரூராட்சி மன்றத் தலைவரும் மாவட்ட துணைச் செயலாளருமான தமயந்தி, மாநில தொண்டரணி துணைச்செயலாளர் ஆவின் ஆறுமுகம், மாநில விவசாய தொழிலாளரணி துணைச் செயலாளர் கணேஷ் குமார் ஆதித்தன்,சேரை கிழக்கு ஒன்றியச் செயலாளர் முத்துப்பாண்டி என்ற பிரபு, நகரச் செயலாளர் வானுமாமலை, துணைத்தலைவர் சுந்தர்ராஜன், மாவட்டப் பொறியாளரணி துணை அமைப்பாளர் மாயா சுரேஷ், மாவட்டப் பிரதிநிதி ஜெபக்குமார், வார்டு கவுன்சிலர்கள் பிரபாரதி, கிருஷ்ணவேணி, கொடிலெட்சுமி, மாவட்டத் தொண்டரணித் தலைவர் ஜெயமாலதி, கவுன்சிலர் ராமு உள்பட பலர் கலந்து கொண்டனர்.